19.06.2024

அ.வ.எண். 128-2018

வாசா.1 - ராமசாமி

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சர்வே எண் பிரதிவாதிகள் பத்திரம் செய்துள்ளதால் அதற்காக வழக்கு தாக்கல் செய்தேன். நான் நஞ்சப்ப கவுண்டர் வகையறாவிடம் இருந்து சொத்துக்களை கிரயம் பெற்றேன். காலை எண்.451, 452 காலைகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வழக்குரையில் நஞ்சப்ப கவுண்டருக்கு எந்த தேதியில் எந்தெந்த காலைகளில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமிகள் ஒதுக்கப்பட்டது என்று நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆனால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அதேபோல் நானும், எந்த தேதியில், என்னென்ன காலையில் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் பெற்றேன் என்று என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் ஆவணங்கள் கொடுத்துள்ளேன்.

எனக்கு சொத்தை விற்ற நஞ்சப்ப கவுண்டருக்கு வா.சா.ஆ.4 ன் அடிப்படையில் இந்த சொத்துக்கள் பாத்தியப்பட்டது. B-அட்டவணை சொத்து விபரத்தில் 1 வது தாக்கில் 5.18 ஏக்கரும், 2 வது தாக்கில் 0.78 ஏக்கரும், 3 வது தாக்கில் 0.76 ஏக்கரும் மொத்தம் 6 ஏக்கர் 22 செண்ட் நஞ்சப்ப கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் கீழ் நான் புல எண்.451/6 ன் கீழ் 2.85 ½ ஏக்கர் நிலமும், புல எண்.451/8 ன் கீழ் 0.04 ¾ ஏக்கரும், 451/7 ல் 0.06 ஏக்கரும் ஆக மொத்தம் 2.95 ¾ ஏக்கர் நிலம் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். அதே தேதியில் வா.சா.ஆ.2 அடிப்படையில் 451/6 ல் 87 ½ செண்ட் நிலமும் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 அடிப்படையில் 451/5 ல் 1.84 ¼ ஏக்கர் நிலமும், 451/3 ல் 0.43 ¼ ஏக்கர் நிலமும், 451/4 ல் 0.19 ஏக்கர் நிலமும், 451/8 ல் 0.04 ஏக்கர் நிலமும், 451/7 ல் 0.05 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 2 ஏக்கர் 56 செண்ட் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம்.

மொத்தம் நான் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் க.ச.எண்.451 ல் நான் 6 ஏக்கர் 39 ¾ செண்ட் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். க.ச.எண்.451/6 காலையில் A-அட்டவணை சொத்தில் 87 ½ செண்ட் நிலமும், அதே காலையில் 2 ஏக்கர் 85 ½ செண்ட் நிலமும், 451/8 காலையில் 0.06 ஏக்கர் நிலமும், 451 காலையில் 0.73 ¼ ஏக்கர் நிலமும், அதே 451 காலையில் 0.25 ஏக்கரும், 451/5 காலையில் 1 ஏக்கர் 84 ¼ செண்ட் நிலமும், 451/3 காலையில் 0.19 ½ ஏக்கராகவும், 451/8 ல் 0.04 ஏக்கரும், 451/7 ல் 0.05 ஏக்கரும் ஆக மொத்தம் 6 ஏக்கர் 90

செண்ட் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம்.

B-அட்டவணை சொத்தில் 16 செண்ட் பூமியும், புல எண். 452 ல் 7 செண்ட் பூமியும், C-அட்டவணை சொத்தில் க.ச.எண்.451 ல் 13 செண்ட் நிலமும், D-அட்டவணை சொத்தில் 3 ¼ செண்ட் நிலமும், E-அட்டவணை சொத்தில் 3 ¼ செண்ட் பூமியும் ஆக தாவா A முதல் E அயிட்டங்கள் வரை க.ச.எண். 451 ல் அனைத்தும் சேர்த்து மொத்தம் 7.25 ½ ஏக்கருக்கு வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். எனவே எனக்கு சொத்தை விற்பனை செய்த நஞ்சப்ப கவுண்டருக்கு வா.சா.ஆ-4 ன் அடிப்படையில் 6.22 ஏக்கர் மட்டுமே பாத்தியம் என்றும், நான் வா.சா.ஆ-1 முதல் 3 ஆவணங்களின் கீழ் கிரயம் பெறும் வகையில் 6.39 ¼ ஏக்கர் பாத்தியப்பட்டுள்ளதாகவும் ஆனால் வழக்கு சொத்து விபரம் கூடுதலாக 7.25 ½ ஏக்கருக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே புல எண்.451 ஐ பொறுத்து எனக்கு கிடைக்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

நான் வா.சா.ஆ.1 முதல் 3 வரை புல எண்.451 ல் 6.22 ஏக்கருக்கு கூடுதலாக நிலங்கள் கிரயம் பெற்றது செல்லாது, மற்றும் அது பிரதிவாதிகள் 3 முதல் 6 நபர்களை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து 451 காலையில் கூடுதல் விஸ்தீரணம் உள்ளதாக நான் வழக்கு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருவாய் துறை ஆவணங்களாக வா.சா.ஆ.10 முதல் 12, 3 முதல் 6 பிரதிவாதிகளை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. 1 முதல் 6 பிரதிவாதிகள் எனக்கு சொத்தை கிரயம் கொடுத்த நஞ்சப்ப கவுண்டரின் சகோதரரான கந்தசாமி கவுண்டரின், வாரிசுகள் என்றால் ஆமாம். வா.சா.ஆ-4 ன் அடிப்படையில் கந்தசாமி கவுண்டருக்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். 3 முதல் 6 பிரதிவாதிகள் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனத வழக்கறிஞரிடம் என்ன எதிர்வாதம் செய்தார்கள் என்று கேட்டேன் ஆனால் தற்போது நினைவில்லை.

1 முதல் 6 பிரதிவாதிகள் நான் கிரயம் பெறுவதற்கு முன்பாகவே 1974 ம் ஆண்டு அவர்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றும் அது தெரிந்திருந்தும் நான் இந்த வழக்கிற்காக மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் படி B-Schedule ஆக கந்தசாமிக்கு சொத்துகள் ஒதுக்கப்பட்டது அதை எதிர்த்து கேள்விகள் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ன் கீழ் 1974 பத்திரத்தின் படி கந்தசாமிக்கு வந்த சொத்தை அவரது மகன் ஒரு பகுதி சொத்தை 18.04.2012 ல் 4ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் அது தவறு. அதேபோல் வா.சா.ஆ.7 ன் அடிப்படையில் 06.05.2013 ல் 1 முதல் 6

பிரதிவாதிகள் ஏற்படுத்தி கொண்ட பரிவர்த்தனை ஆவணமும் செல்லக்கூடியது என்றால் சரியல்ல.

அதேபோல் வா.சா.ஆ.8 ன் கீழ் 7, 8 பிரதிவாதிகளுக்கு முன்னதாகவே ஒரு கிரயப் பத்திரம் அதை தொடர்ந்து பிழை திருத்தல் பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அதே தேதியில் ஒரு பகுதி சொத்தை வா.சா.ஆ.9 சொத்தை 7, 8 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். எனவே, வா.சாஆ.6 முதல் 9 வரையிலான ஆவணங்கள் செல்லக்கூடிய ஆவணங்கள் மற்றும் அதை கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல, அந்த ஆவணத்தின் கீழ் கோரியுள்ள பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, அது வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு மூலப்பத்திரம் ஆகும்.

நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதா என காட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புல எண்.451 ல் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று நான் சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்யவில்லை என்றும், நான் பொய்யாக இந்த சிவில் மற்றும் குற்றவியல் வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு விஸ்தீரணத்திற்கான மூல பத்திரங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சுத்தக்கரங்களுடன் நீதிமன்றத்திற்கு அணுகாததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

7, 8 பிரதிவாதிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகததால் அவர்கள் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

Sd/ராமசாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif
Sulur